



# வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

எண்.41 - வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

எண்.51 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

## அறிவிப்புகள்

## 2023 - 2024

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.

# வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

## மானியக் கோரிக்கை

**எண்.41 - வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை**

**எண்.51 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

## அறிவிப்புகள்
## 2023 - 2024


**கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்**

வருவாய் மற்றும் பேரிடர்

மேலாண்மைத் துறை அமைச்சர்

**1. பேரிடர் முன்னறிவிப்பு, பேரிடர் மேலாண்மை மற்றும் தொடர் கண்காணிப்பு அமைப்புகளை வலுப்படுத்தி புதிய TN-Alert கைபேசி செயலி மற்றும் மேம்படுத்தப்பட்ட TN-SMART செயலி ரூ.12.50 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.**

பொதுமக்களுக்கு இருப்பிடம் சார்ந்த பேரிடர் குறித்த முன்னெச்சரிக்கைகள், இடி, மின்னல், மழை, நீர்த்தேக்கங்களின் நீர்இருப்பு உள்ளிட்ட தகவல்கள் வழங்கும் வகையில் TN-Alert என்ற கைபேசி செயலி, மாநில மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்கள் மட்டும் பயன்படுத்தும் வகையில் மறுவடிவமைக்கப்பட்ட TN-SMART செயலி மற்றும் பல்வேறு துறைகளில் அனுபவம் பெற்ற நிபுணர்களின் குழுவுடன் கூடிய ஒரு தொழில்நுட்ப அலகு ஆகியவை ரூ.12.50 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**2. மயிலாடுதுறை மாவட்டம் திருமைலாடி மற்றும் முதலைமேடு கிராமங்களில் ரூ.16 கோடி மதிப்பீட்டில் இரண்டு பேரிடர் மீட்பு மையங்கள் அமைக்கப்படும்.**

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம் கொள்ளிடம் ஆற்றங்கரைப் பகுதியில் அமைந்துள்ள திருமைலாடி கிராமத்தின் நாதல்படுகை, சந்தப்படுகை மற்றும் திட்டுப்படுகை குடியிருப்பு பகுதிகளிலும், முதலைமேடு கிராமத்தின் முதலைமேடுத்திட்டு குடியிருப்பு பகுதிகளிலும் வசிக்கும் பொதுமக்களை மழை, வெள்ளக் காலங்களில் பாதுகாப்பாக தங்க வைக்க திருமைலாடி மற்றும் முதலைமேடு கிராமங்களில் ரூ.16 கோடி மதிப்பீட்டில் இரண்டு பேரிடர் மீட்பு மையங்கள் அமைக்கப்படும்.

**3. பேரிடர் காலங்களில் தடையற்ற தொலைத்தொடர்பை உறுதிப்படுத்தும் வகையில் 31 மாவட்டங்களில் தற்போதுள்ள அனலாக் (Analogue) VHF ரிப்பீட்டர்கள், ரூ.7.31 கோடி மதிப்பீட்டில் டிஜிட்டல் ரிப்பீட்டர்களாக மேம்படுத்தப்படும்.**

தடையற்ற தொலைத் தொடர்புக்காக அனைத்து மாவட்டங்களிலும் VHF கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. பல ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்ட அனலாக் (Analogue) VHF ரிப்பீட்டர்களில் அடிக்கடி பழுது ஏற்படுவதால் பேரிடர் காலங்களில் தொலைத்தொடர்பு பாதிப்புக்குள்ளாகிறது. எனவே, 31 மாவட்டங்களில் தடையற்ற தொலைத்தொடர்பை உறுதிப்படுத்தும் வகையில் தற்போதுள்ள அனலாக் (Analogue) VHF ரிப்பீட்டர்கள், டிஜிட்டல் ரிப்பீட்டர்களாக ரூ.7.31 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

## 4. வெள்ள பாதிப்பிற்குள்ளாகும் கடலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட கொள்ளிடம் ஆற்றின் இடது கரை ரூ.14.50 கோடி மதிப்பீட்டில் பலப்படுத்தப்படும்.

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கீழ்திருக்கழிப்பாலை மற்றும் சின்ன காரமேடு ஆகிய கிராமங்களில் கொள்ளிடம் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதால் இடது கரை பலவீனம் அடைந்து 17 கிராமங்கள் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. இதனை நிரந்தரமாக தடுக்கும் பொருட்டு கொள்ளிடம் ஆற்றின் இடதுபக்க மண் கரைகள் ரூ.14.50 கோடி மதிப்பீட்டில் அலைக்கற்களைக் கொண்டு பலப்படுத்தப்படும்.

## 5. தமிழ்நாட்டில் புதியதாக நிலநடுக்க கண்காணிப்பு நிலையம் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

தமிழ்நாட்டில் சமீப காலங்களில் நில அதிர்வுகள் உணரப்படுவதை கருத்தில் கொண்டு, தேசிய நில அதிர்வு மையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் நில அதிர்வு அலைவரிசை உணர்விகள் (Seismic Sensors) மற்றும் தரவு கையகப்படுத்தும் அமைப்புகளுடன் கூடிய கண்காணிப்பு நிலையம் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## 6. நில அளவை மற்றும் நில ஆவணங்கள் தொடர்பான இ-சேவைகள் குறித்த தகவல்களை அளிக்கும் பொருட்டு நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்ககத்தில் தொலைபேசி அழைப்பு மையம் நிறுவப்படும்.

நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறையில் பொதுமக்கள் பயனடையும் வகையில் பட்டா, சிட்டா, கிராம வரைபடம், பிளாக் வரைபடம், புலப்படங்கள் மற்றும் தொடர்பு விளக்கப்பட்டியல் (Correlation Statement) போன்ற பல்வேறு நிலம் சார்ந்த ஆவணங்களை இணையம் வழியே வழங்கும் வசதி செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் எங்கிருந்து வேண்டுமானாலும், பட்டா மாறுதல் கோரி விண்ணப்பிக்கும் இணைய வழி சேவை தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தும் வகையிலும், இணைய வழி சேவை விநியோகத்தினை தடங்கலின்றி பொதுமக்களுக்குக் கொண்டு சேர்க்கும் வகையிலும், இணையம் வழியே நில ஆவணங்களைப் பொதுமக்கள் பெறுவதற்கு உறுதுணையாகவும் தொலைபேசி அழைப்பு மையம் (Call Centre) ஒன்று நிறுவப்படும்.

## 7. இடம் சார்ந்த நில ஆவணங்களின் விவரங்களை அறிவதற்குரிய புதிய செயலி உருவாக்கப்படும்.

கிராம வரைபடங்களிலும், புல வரைபடங்களிலும், Geo-referencing பதிவு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்புலப்படங்கள் கைப்பேசி வாயிலாகப் பொதுமக்களுக்கு வழங்கும் விதத்தில் ஒரு புதிய செயலி உருவாக்கப்படும். இந்த செயலி வாயிலாக பொதுமக்கள் எந்த ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு சென்றவுடன் அந்த இடம் சார்ந்த விவரங்களான புல எண், உரிமையாளரின் பெயர், பயிர் சாகுபடி போன்ற விவரங்கள் அலுவலகங்களுக்கு செல்லாமலேயே இச்செயலி வாயிலாக அனைத்து விவரங்களையும் அறிந்து கொள்ள இச்சேவை பேருதவியாக இருக்கும்.

**8. சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் மற்றும் காரைக்குடி வட்டங்களிலுள்ள 23 கிராமங்களில் மனை வாடகை (Ground Rent) விதிக்கப்பட்டு பட்டா வழங்கப்படாமல் உள்ள பகுதி மக்களுக்கு இரயத்துவாரி மனைப் பட்டா வழங்கப்படும்.**

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி மற்றும் திருப்பத்தூர் வட்டங்களிலுள்ள 23 கிராமங்களில் ஜமீன் ஒழிப்பு மற்றும் இனாம் ஒழிப்பு சட்டங்களின் கீழ் இரயத்துவாரி நிலவரித் திட்டம் மேற்கொள்ளப்பட்டு மனை வாடகை பதிவேடு வெளியிடப்பட்டு, பட்டா வழங்கப்படாமல் அரசு-புறம்போக்கு என வகைபாடு செய்யப்பட்டு அனுபவதாரர்களின் பெயர்கள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை சரிசெய்யும் வகையில் ரயத்துவாரி மனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் சுமார் 15,000 குடும்பங்கள் பயனடையும்.

**நிலவரித் திட்டம் மேற்கொள்ளப்படாமல் விடுபட்டிருந்த புலங்களில் பல வருடங்களாக குடியிருந்து வரும் குடும்பங்களுக்கு இரயத்துவாரி பட்டா வழங்கப்படும்.**

9. ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம் மற்றும் நகரம், வார்டு C, D மற்றும் E-இல் சர்க்கார் புறம்போக்கு நத்தம் நிலத்தில் 70 ஆண்டுகளுக்கு மேலாக தார்சு வீடு / ஓட்டு வீடு கட்டி குடியிருந்து அனுபவம் செய்து வரும் 4000 குடும்பங்களுக்கு, நிலவரித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வீட்டு மனை பட்டா வழங்கப்படும்.

10. கரூர் மாவட்டம், புகழூர் வட்டம், புஞ்சை புகழூர் வடக்கு கிராமம் புல எண்.375/B, புஞ்சை புகழூர் வடக்கு கிராமம், புல எண்.203/A மற்றும் நஞ்சை புகழூர், புல எண்.269-இல் 50 ஆண்டு காலமாக வசித்து வரும் மக்களுக்கு நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் வீட்டுமனை பட்டா வழங்கப்படும். இதனால் சுமார் 1,705 குடும்பங்கள் பயனடையும்.

11. தஞ்சாவூர் மாவட்டம். திருவிடைமருதூர் வட்டம், திருபுவனம் கிராமத்தில் அரசு புறம்போக்கு நத்தம் நிலத்தில் நீண்ட நாட்களாக குடியிருந்து வரும் குடும்பங்களுக்கு மனைப்பட்டா வழங்கப்படும். இதனால் சுமார் 200 குடும்பங்கள் பயனடையும்.

12. திருப்பத்தூர் மாவட்டம் மற்றும் வட்டம், வெங்களாபுரம் கிராமத்தில் பல ஆண்டுகளாக வசித்து வரும் மக்களின் நிலங்கள் கிராமம் மற்றும் நகர்ப்புற வருவாய் ஆவணங்களில் சேர்க்கப்படாமல் இருந்து வந்த நிலையில், பொது மக்களின் நீண்ட கால கோரிக்கைக்குத் தீர்வு காணும் வகையில் நிலவரித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நில உரிமையாளர்களுக்கு இணைய வழி வீட்டு மனைப் பட்டா வழங்கப்படும். இதனால் சுமார் 250 குடும்பங்கள் பயனடையும்.

13. தருமபுரி மாவட்டம் மற்றும் வட்டம், ஏ.ரெட்டிஅள்ளி கிராமத்தில் நிலஎடுப்பு செய்து ஏற்கெனவே வழங்கப்பட்ட வீட்டுமனை பட்டா 2020- ஆம் ஆண்டு இரத்து செய்யப்பட்டது. அவ்விடத்தில் ஊரக வளர்ச்சித்துறை அல்லது வீட்டு வசதித் துறையுடன் இணைந்து வீட்டு வசதி செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும். தற்போதைய பயனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பட்டா வழங்கப்படும்.

14. ஈரோடு மாவட்டத்தில், பவானிசாகர் அணை மற்றும் கீழ்பவானி நீர்பாசனத் திட்டங்களின் பேரில் திட்ட நிபந்தனைப் பட்டா பெற்றவர்களுக்கு தற்போது, திட்ட நிபந்தனையை தளர்வு செய்து அயன் பட்டா வழங்கப்படும்.

**15. தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "குடும்பம்" என்ற வரையறையில் ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் சம உரிமை அளிக்கும் பொருட்டு திருமணமாகாத மகள்கள் மற்றும் திருமணமாகாத பேத்திகள் என்ற சொற்கள் நீக்கப்படும்.**

ஆண் பெண் சமத்துவம் மற்றும் ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் சம உரிமை ஏற்படுவது மட்டுமல்லாமல் மேஜரான பெண்களின் நில உடைமைகள் குடும்ப நில உடைமைகளிலிருந்து நீக்கம் செய்யப்படுவதால், பெண்கள் தனியாக நில உடமைகள் வைத்துக் கொள்ள ஏதுவாக தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "குடும்பம்" என்ற வரையறையில் ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் சம உரிமை அளிக்கும் பொருட்டு திருமணமாகாத மகள்கள் மற்றும் திருமணமாகாத பேத்திகள் என்ற சொற்கள் நீக்கம் செய்து, மைனர் மகன்கள் மற்றும் மைனர் பேரன்களுக்குப் பதிலாக, மைனர் பிள்ளைகள் மற்றும் மைனர் பேரன்கள் பேத்திகள் என்று சேர்த்து சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும்.

## 16. பதிவு பெற்ற சுய உதவிக்குழுக்களுக்கு கிராமங்களில் குடிசைத்தொழில் செய்ய ஏதுவாக பூமிதான நிலங்கள் வீட்டு மனையாக வழங்கப்படும்.

கிராமங்களில் குடிசை தொழில்கள் வளர்ச்சி மற்றும் மேம்பாடு அடையவும் சுயஉதவி குழுக்கள் பொருளாதார முன்னேற்றம் அடையவும் கிராமங்களில் குடிசைத் தொழில் செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு குடிசைத்தொழில் செய்ய விரும்பும் பதிவுபெற்ற சுய உதவிக் குழுக்களுக்கு பூமிதான நிலங்கள், வீட்டுமனையாக வழங்கப்படும்.

**17. நகர்ப்புற நில உச்ச வரம்புச் சடடத்தின் கீழ், கையகப்படுத்தப்பட்ட உபரி நிலங்களை அறியாமல் கிரையம் பெற்றவர் திட்டத்தின் கீழ் வரன்முறை செய்யும் தீர்வு நாள் நீட்டிக்கப்படும்.**

நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ், கையகப்படுத்தப்பட்ட உபரி நிலங்களைக் கிரயம் பெற்று பட்டா பெற இயலாத கிரயதாரர்களின் துயரினைத் துடைக்கும் வகையில் வரன்முறை செய்யும் தீர்வு நாளாக 26.09.2008 நிர்ணயம் செய்யப்பட்டு அறியாமல் கிரயம் பெற்றவர் திட்டம் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. 2008-க்கு பின்னர் கிரயம் பெற்றவர்களுக்கும் திட்டத்தின் பலன் சென்றடையும் வகையில் 26.09.2008-க்கு பின்னர் கிரயம் பெற்றவர்கள் பயனடையும் வகையில் தீர்வு நாள் நீட்டிக்கப்படும். மேலும், நில மதிப்பு தொகையும் திருத்தம் செய்யப்படும்.

## 18. நலிந்தோர் நிவாரண உதவித் திட்டம் மற்றும் விபத்து நிவாரண உதவித் திட்டம் தொடர்பான சேவைகள் இணையவழியில் வழங்கப்படும்.

வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களில் சமூகப்பாதுகாப்புத் திட்டப்பிரிவில் முதியோர், விதவை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு வகையான மாதாந்திர உதவித்தொகை வழங்கும் திட்டங்கள் ஏற்கனவே கணினி மயமாக்கப்பட்டு இணைய வழியிலான சேவைகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் நலிந்தோர் நிவாரண உதவித்திட்டம் மற்றும் விபத்து நிவாரண உதவித்திட்டம் ஆகிய திட்டங்களும் கணினி மயமாக்கப்படும். இதன் மூலம், பொதுமக்கள் இணையவழியாக விண்ணப்பித்து இத்திட்டத்தின் கீழ் அரசினால் வழங்கப்படும் நிதியுதவியினை நேரடியாக பெற்றுக்கொள்ள இயலும்.

## 19. வருவாய்த் துறையில் வழங்கப்படும் இதர சான்றிதழ்கள் அனைத்தும் இணையவழியில் வழங்கப்படும்:

வட்டாட்சியர் / கோட்டாட்சியர் / மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் பொதுமக்களுக்கு 25 வகையான சான்றிதழ்கள் மற்றும் சேவைகள், வருவாய்த் துறை மூலமாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இனிவரும் காலங்களில் இதர சான்றிதழ்கள் அனைத்தும் இணையவழிச் சேவை மூலம் வழங்கப்படும்.

**கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்**
வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மைத் துறை அமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.